**சுருக்கம்**

ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் – கிராம நிர்வாகம் – முன்னாள் கிராம அலுவலர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் ஆகியவற்றை உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் [பணி.8(1)] துறை**

**அரசாணை (நிலை) எண்.396** **நாள்: 12.11.2012**

**படிக்கவும்:**

1. அரசாணை (நிலை) எண்.828, வருவாய்த்துறை, நாள் 23.08.1996.
2. அரசாணை (நிலை) எண்.629, வருவாய்த்துறை, நாள் 22.07.1998.
3. அரசாணை (நிலை) எண்.40, வருவாய்த்துறை, நாள் 24.01.2008.
4. அரசாணை (நிலை) எண்.168, வருவாய்த்துறை, நாள் 07.04.2010.

**மீண்டும் படிக்கவும்:**

5. சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண்.27260/08–ன் மீதான இடைக்காலத் தீர்ப்பு நாள் 29.4.2011.
6. தமிழ்நாடு கிராம அலுவலர் சங்கம், தலைவரின் மனு நாள் 9.11.2011.
7. முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் வ.நி II(2)/34016/2011 நாள் 27.3.2012.

******

**ஆணை:**

14.11.1980–இல் வெளியிடப்பட்ட அவசர சட்டத்தால் பதவி இழந்த முன்னாள் கிராம அலுவலர்களுக்கு, சிறப்பு ஓய்வூதியமாக ரூ.175/––ம் மற்றும் குடும்ப ஓய்வூதியமாக ரூ.100/–ம் வழங்கி, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது. பின்னர், சிறப்பு ஓய்வூதியத்தை ரூ.250/– ஆகவும் மற்றும் குடும்ப ஓய்வூதியத்தை ரூ.150/– ஆகவும் உயர்த்தி மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது.

2. 14.11.1980–ல் வெளியிடப்பட்ட அவசர சட்டத்தின்மூலம் பணியிழந்த முன்னாள் கிராம அலுவலர்களுக்கு மதுரை கிளை உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் வழங்கி வந்த சிறப்பு ஓய்வூதியமான ரூ.250/–ஐ ரூ.350/–ஆக (அகவிலைப்படியுடன் ரூ.1130/–) உயர்த்தியும், மேலும் முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கி வந்த குடும்ப ஓய்வூதியத் தொகையான ரூ.150/–ஐ ரூ.400/–ஆக உயர்த்தியும் மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

3. அதன் பின்னர், முன்னாள் கிராம அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு ஓய்வூதியமான ரூ.350/–ஐ ரூ.1,140/–ஆக உயர்த்தியும் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு பிறபடிகளின்றி வழங்கப்பட்டு வந்த சிறப்பு குடும்ப ஓய்வூதியத்தினை மாதம் ரூ.400/–லிருந்து ரூ.560/–ஆக (பிறப்படிகளின்றி) உயர்த்தியும் மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

/த.பி.பா/

4. நீதிப்பேராணை மனு எண்.27260/08—ன்மீது சென்னை உயர்நீதிமன்றத்தின் 29.4.2011—ஆம் நாளிட்ட இடைக்கால ஆணையில் முன்னாள் கிராம அலுவலர்கள் ஒய்வூதியத்தினை ரூ.898/—லிருந்து 1275/—ஆக உயர்த்தி வழங்குவது தொடர்பாக பெறப்பட்ட கருத்துருவின் மீது 8 வாரங்களுக்குள் ஆணை பிறப்பிக்குமாறு உத்தரவு வழங்கியுள்ளது. மேலும், ஓய்வு பெற்ற முன்னாள் கிராம அலுவலர்கள் சுமார் 4000 பேர் உள்ளதாகவும், அனைவரும் 65 முதல் 95 வயது உடையவர்களாக உள்ளனர் என்றும், தங்களுக்கு வேறு எந்தவிதமான வருமானமும் இல்லாமல் இருப்பதாகவும், வயதான காலத்தில் தற்போதுள்ள விலைவாசி உயர்வை கருத்தில் கொண்டும் மருத்துவம் மற்றும் இதர குடும்ப செலவுகளுக்கு மிகவும் சிரமமாக இருப்பதாகவும், அரசு ஒய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படுவது போன்றும், முதியோர் உதவித் தொகையாக ரூ.1000/— வழங்குவதைக் கருத்தில் கொண்டும், தங்களுக்கும் குறைந்தபட்ச ஒய்வூதியம் ரூ.3050/— மற்றும் இதரபடிகள் மற்றும் குடும்ப ஒய்வூதியத்தை உயர்த்தி வழங்குமாறு தமிழ்நாடு கிராம அலுவலர்கள் சங்கம் கோரிக்கை விடுத்தது.

5. மேற்படி சங்கத்தின் கோரிக்கையினை அரசு நன்கு ஆய்வு செய்து, 14.11.1980—ல் வெளியிடப்பட்ட அவசர சட்டத்தின் மூலம் பணியிழந்த முன்னாள் கிராம அலுவலர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் சிறப்பு ஒய்வூதியத்தை ரூ.1,140/—லிருந்து ரூ.1,500/— ஆகவும், அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டுவரும் குடும்ப ஒய்வூதியத்தை ரூ.560/—லிருந்து (பிறப்படிகளின்றி) ரூ.1,000/—ஆகவும் (பிறபடிகளின்றி) உயர்த்தி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.22609/ஒய்வூதியம்/2012, நாள் 25.06.2012—ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

ராஜீவ் ரஞ்சன்
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை—5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை—15.
மாநில கணக்காயர், சென்னை 18/35.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை—5/9.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
<u>நகல்:—</u>
முதலமைச்சர் அலுவலகம், சென்னை—9.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய்) அவர்களின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை—9
பணியாளர் (ம) நிர்வாகச் சீர்திருத்தத்துறை, சென்னை—9
நிதித்துறை, சென்னை—9.
மாநிலத் தலைவர், தமிழ்நாடு கிராம அலுவலர் சங்கம்,
13/7, ராஜாஜி தெரு, புது பெருங்களத்துார், சென்னை—63.
இ.கோ/உபரி நகல்கள்.

/ / ஆணைப்படி அனுப்பப்படுகிறது / /

பிரிவு அலுவலர்.